மக்கள் நலம் நாடுவதே மருத்துவர் கடன்

Phone No 4502 | Regd. No. M. 5458
விலை ஒரு அணா | இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (19—3—50) வெளியூர் (20—3—50) [இதழ் 98

பட்டி தொட்டிகளெங்கும் சென்று பணியாற்றுங்கள்

மருத்துவக்கலை தாய்மொழியில் அமைய வேண்டும்

டாக்டர் லட்சுமணசாமியின் அறிவுரை

"மக்களுடைய உடல் நலம் பற்றியும், நல்வாழ்வு பற்றியும் மருத்துவர்கள் ஆழ்ந்து அக்கரையுடன் கவனிக்க வேண்டும். மருத்துவத்துறையில் உயர்ந்த பட்டம் பதவிகளைப் பெற்றவர்கள், வைத்திய வசதி கிடைக்காமல் மக்கள் அவதிப்படும் கிராமப்பகுதிகளுக்குச் சென்று பணியாற்ற வேண்டும்."

என்று டாக்டர் ஏ. லட்சுமணசாமி அவர்கள் கோவை மாவட்ட மருத்துவர் கழக வெள்ளிவிழாவில் பேசிய போது குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில்:—

"இரண்டு வைத்திய முறைகளைப் பயின்றுள்ள மருத்துவர்கள் முன்வந்து, அவை எவ்வகையில் பயன் படுத்தக் கூடியவை என்பதையும் கண்டறிதல் வேண்டும். இந்தியாவுக்கு ஏராளமான மருத்துவர்களும், மருத்துவ சாதனங்களும் மேலும் தேவைப்படுவதுமட்டுமின்றி, மருத்துவக் கல்வி அந்தந்த நாட்டுமொழிகள் மூலம் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். அதற்கான மருத்துவ பாடப் புத்தகங்கள் தாய் மொழியில் வெளிவர வேண்டும்" என்றும் கூறினார்.

டாக்டர் லட்சுமணசாமியின் இந்தப் பேச்சு, சாதாரணமான பேச்சு என்று கருதிவிடக்கூடியதல்ல. அவசியமும், அவசரமுமாக நாட்டுக்குத் தேவைப்படும் அறிவுரை இது-அல்ல-மருந்து!

"நாட்டு மக்களின் உடல் நலம், நல்வாழ்வு இவற்றை மருத்துவர்கள் ஆழ்ந்து அக்கரையுடன் கவனிக்க வேண்டும்" என்று அக்கரையுடன் கூறுகிறார் அன்பர் லட்சுமணசாமி, அவரது கூற்றை அரசியலாரும் சற்று அக்கரையுடன் கவனிக்கவேண்டும்.

பொதுவாக, இந்நாளில் மருத்துவர்கள் எனப்படுவோரெல்லாம் ஒருவித முதலாளிகளாகவே விளங்குகின்றனர். டாக்டர் அவர்கள் சொன்னது போல, மக்களின் நல்வாழ்வைப் பற்றிய கவலை நமது மருத்துவர்களுக்கு - பட்டம் - பதவி பெற்ற மருத்துவர்களுக்கு இருப்பதாவே தெரியவில்லை-மருத்துவர் எனப்படுவோருக்கு இருக்கவேண்டிய 'இரக்கம்' என்னும் இன்றியமையாப் பண்பாடே நம் மருத்தவர் பலரிடம் இருப்பதில்லை 'இரக்கம்' காசு கொடுத்து வாங்கவேண்டிய கடைச் சரக்காகிவிட்டது! பணத்துக்கேற்ற வைத்தியம், என்ற முறையிலே வளர்ந்துகொண்டிருக்கிறது வைத்தியத்துறை. அதுபோலவே அத்துறையின் முன்னேற்றம், அதன் புதிய புதிய கண்டுபிடிப்புகள்—இன்னபிற சாதனங்களும் பணம் படைத்தோர்க்கே பயன்படும் வகையில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலை மாற வேண்டும்

டாக்டர் லட்சுமணசாமி அவர்கள் கூற்றுப்படி மக்களுடைய நல்வாழ்வும், மருத்துவர்களுடைய திறமையும் ஒன்றோடொன்று இணைக்கப்பட வேண்டும். அதுதான் மருத்துவக்கலையின் நோக்கமும் ஆகும்

மருத்துவக்கலை ஒரு மகத்தான கலை. அக்கலை பயின்றோர் அன்பின் அடிப்படையிலே வேலை செய்யவேண்டும். இது நடக்கிற காரியமா, என்ற ஐயப்பாடு சிலருக்குத் தோன்றலாம். ஆனால் இது நடைபெறவேண்டிய காரியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் அது தேவையா, அல்லவா என்பதைத்தான் முதலில் கவனிக்க வேண்டும். அடுத்த படியாகவே, முடியுமா முடியாதா என்ற பிரச்சினை கவனிக்கப்படவேண்டும். தேவை என்பது தெளிவாகி விட்டால் முடியாத காரியம்ஒன்றுமில்லை.

எனவே, மருத்துவர்கள் மக்கள் நலம் நாடவேண்டியது அவசியமும், அவசரமுமாகத் தேவைப்படுவ தொன்றாகும். இக்காரணம்பற்றி மருத்துவர்கள் பொதுநலப்பணியாற்ற வேண்டுவதும் அவசியம். இந்த அவசியத்தை அவர்கள் உணரும்படி செய்வது அரசியலார் கடனாகும்.

டாக்டர் லட்சுமணசாமி மேலும் பேசுகையில், பட்டம் பெற்ற மருத்துவர்கள் கிராமப் பகுதிகளுக்குச் சென்று பணியாற்ற வேண்டும் என்கிறார். இதவும் அவசியமான தோர் அறிவுரையே. கிராம மக்களுக்கும் மருத்துவ வசதிக்கும் வெகு தூரம் என்ற நிலை இருந்துவருகிறது. இந் நாட்டில் உயர்தர மருத்துவ வசதிகள் நகர மக்களுக்கேயன்றி, கிராம மக்களுக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும். தக்க வைத்திய வசதி இல்லாத காரணத்தால் மரண விகிதம் அதிகரிக்கிறது கிராமங்களில். இயற்கையான நல்வாழ்வு வாழக் கூடிய சுகாதார சூழ்நிலையிலுள்ள மக்களிடையே மரண விகிதம் அதிகமாக இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் என்ன? சில அவசர வைத்திய முறை

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

உபரி நெல்லை சர்க்காருக்கு கொடுத்துதவுக

சென்னை - மைசூர் இடையே ஒப்பந்தம்?

சென்னை, மார்ச். 18—

சென்னை ராஜாங்கத்திலுள்ளவர்களுக்கு மைசூர் சமஸ்தானத்தில் நிலம் சொந்தமாக இருந்தால் அதில் விளையும் அரிசி, நெல் தானியத்தைச் சொந்த உபயோகத்திற்காக பெறுவர், அதுபோல் மைசூரிலுள்ளவர்களுக்கு இங்கே நிலமிருநதால் இங்கு இருந்து நெல் அவர்களுக்கு வசதி ஏற்படுவதற்கான ஒரு பரஸ்பர ஏற்பாட்டைச் சென்னை சர்க்காரும், மைசூர் சர்க்காரும் செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

மைசூரிலுள்ளவர்கள் இங்கிருந்து தானியத்தைப் பெறுமுன் தங்களிடமுள்ள உபரிதான்யத்தை சென்னை சர்க்காருக்குக் கொடுத்துவிட்டு பின்னர் தானியத்தை எடுத்துச் செல்வதற்கு மனு செய்யவேண்டும்

மைசூர் சமஸ்தானத்தில் வசித்து இங்கு நிலம் வைத்துக்கொண்டிருப்பவருக்குக் குடும்பத்தில் பெரியவர்களுக்குத் தினத்திற்கும் 12 அவுன்ஸ் நெல் அல்லது 8 அவுன்ஸ் அரிசி, குழந்தைகளுக்கு 6 அவுன்ஸ் நெல், அல்லது 4 நான்கு அவுன்ஸ் அரிசி சென்னை சர்க்கார் அனுமதிக்கும். —குளோப்

காமன்ஸில் காமா பிரச்சினை

லண்டன், மார்ச். 18—

வெள்ளை மாதை மணந்த ஆப்பிரிக்க சுதேசித் தலைவர் காமாவுக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவை ஆட்சேபித்து லிபரல் கட்சி காமன்ஸில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர இருக்கிறது.

காமா விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் காட்டிவரும்போக்கு அதிருப்திகரமாக இருக்கிறதென்றும், அவ்விஷயமாக ஏற்படுத்தப்பட்ட நீதி விசாரணை ரிப்போர்ட் பிரசுரிக்கப் படவில்லை என்பது வருந்தத்தக்கதென்றும், சர்க்கார் மீண்டும் இவ்விஷயமாக புனராலோசனை செய்யவேண்டுமென்றும் அத்தீர்மானம் கூறுகிறது.

காமா தென் ஆப்பிரிக்காவுக்குச் செல்லலாமென்று சில நிபந்தனைகள் பேரில் அனுமதிக்கப்பட்டிருக்கிறாரே ஒழிய சர்க்கார் கொள்கை மாறவில்லை என்றும் கூறப்படுகிறது.

லிபரல் கட்சியின் இத்தீர்மானம் பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஆச்சரியத்தை விளைவித்திருக்கிறது. தொழில் கட்சி கட்டுப்பாட்டையும் மீறி சிலர் சர்க்காருக்கு எதிராக ஓட்டு செய்வது சாத்தியம்.

இவ்விஷயமாக சர்க்கார் கொள்கையை சர்ச்சில் கண்டிக்கிறார் என்று ஒரு குறிப்பிட்ட முறையில் நடந்துகொள்ளும்படி அவர் தம் கட்சிக்கு உத்தரவு இட்டதாகத் தோன்றவில்லை.

இஸ்ரேலில் வேலையில்லா திண்டாட்டம்

ஜெருசலம், மார்ச். 17—

இஸ்ரேலில் வேலையில்லாதிருப்பவர் எண்ணிக்கை 84000 என்று பத்திரிகைகள் கூறுகின்றன. விமான என்ற இடத்தில் அணை கட்டி முடிந்த பின்பு இன்னும் 25000 பேர் வேலையில்லாமல் இருக்க நேரிடும் என்று கூறப்படுகிறது.

இதுவரை வேலையிழந்தவர்களுக்காக 4500,000 பவுன் இஸ்ரேல் சர்க்கார் செலவிட்டிருந்தும் இன்னும் அதிருப்தி இருந்துவருகிறதென்று கூறப்படுகிறது.

வைடமின் மாத்திரைகள் பசியைத் தணிக்காது

வைடமின் மாத்திரைகளை உட்கொள்வதால் வயிறார உண்டு பசி தணியும் திருப்தி ஏற்படமுடியாது என்று, பிரிட்டிஷ் வைத்திய பத்திரிகையான 'மெடிகல் பிரஸ்' எழுதியிருக்கிறது.

என்னதான் மாத்திரைகளையும் எவ்வளவுதான் சாப்பிட்டாலும், உண்ணும் உணவுக்கு ஈடு இருக்காது என்று அப்பத்திரிகை எழுதியிருக்கிறது.

நாஜித் தலைவர் சரணடைந்தார்

மாஜி நாஜித் தலைவரும் நாஜிப் பத்திரிகையான 'ஸர்க்லெட்' ஆசிரியர் என்று சொல்லிக்கொள்பவருமான ஜோஸிம் செலேவிங் மூனிக் போலீஸாரிடம் சரணடைந்து விட்டார்.

இவர் போலந்தில் நாஜிநடவடிக்கை அதிகாரியாக இருந்தவராம். இவருடைய சகாக்கள் புத்தங்கள் சிகளாக சிறைபிடிக்கப்பட்டு விசாரணைக்கு அனுப்பப்பட்டபோது இவர் பவேரியாவில் தலைமறைவாக இருந்து வந்தாராம். —குளோப்.

நாற்பதாயிரம் ஆண்டுகட்கு முன் மனிதன்

வட அமெரிக்காவில் ஒரேகனிக் கட்டிகளால் இருந்த 40,000 ஆண்டுகளுக்குமுன் அங்கு மனிதர்கள் இருந்தார்களா என்ற விஷயம் விவாதத்திற்குரிய விஷயமாக இருந்து வருகிறது.

டாக்டர் ஜார்ஜ் கார்டர் என்பவர் அங்கு மனிதன் 40,000-ஆண்டுகளுக்குமுன் இருந்ததற்கான அறிகுறிகள் காணப்படுகிறதென்பதைக் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார்.

சென்னை, மார்ச். 18—

சென்னை லயோலா காலேஜ் வெள்ளிவிழா இந்த ஆண்டு அக்டோபர்மாதம் முடிவில் நடைபெறவிருக்கிறது. அவ்விழாவை எவ்வாறு கொண்டாடுவதென்று காலேஜ் ரெவரண்ட் பாதர் டி. கார்டன் தலைமையில் ஒரு கமிட்டி கூட்டம் நேற்று நடைபெற்றது.

பதிவாளர் பதவியிலும் பாவையர்க்குப் பங்கு!

சப்-ரிஜிஸ்ட்ரார் பதவியில் மூன்றில் ஒரு பங்கு பெண்களே !

சென்னை, மார்ச். 18—

அடுத்ததடவை சப் ரிஜிஸ்ட்ரார் பதவிக்கு ஆட்கள் எடுக்கும் போது, 25 சதவிகிதத்துக்குக் குறையாமலும் 33⅓ சதவிகிதத்துக்கு அதிகப் படாமலும் பெண்கள் நியமிக்கப்படுவார்களென்று தோழர் நாகப்பா கேட்ட கேள்வியொன்றுக்குப்பதிலளிக்கையில், நிதிமந்திரி கோபால் ரெட்டி நேற்று சட்டசபையில் அறிவித்தார். பெண் சப்ரிஜிஸ்ட்ர்களை நியமிப்பதென அரசாங்கம் ஏற்கெனவே முடிவு செய்துள்ளதையொட்டித்தான இந்த நடவடிக்கை எடுத்துகொள்வதாக அவர் அறிவித்தார் இப்பதவிபெற தாழ்த்தப் பட்டோரும் மற்ற முன்னேற்றமடையாத வகுப்பினரும் குறைந்த பட்சக்கல்வி பெற்றிருக்க வேண்டுமென்றும் மற்றவகுப்பினர் பி ஏ. அல்லது பி. எஸ் ஸி, யாவது படித்திருக்கவேண்டுமென்றும் அவர் அறிவித்தார்

பெண்களுக்கு எல்லா இலாக்காக்களிலும் வேலை கொடுத்து ஆண்களுக்கு வேலைகிடைக்காமல் திண்டாடும்படி செய்யப்போவதில்லையென்றும், குறிப்பிட்ட இலாகாக்களில்தான் அவர்கள் அனுமதிக்கப்படுவார்களென்றும் மந்திரி அறிவித்தரர் இதுவரையில் ஒரு பெண் கூட சப்ரிஜிஸ்டராக நியமிக்கப்படவில்லை.

பெண்களை நியமிப்பதில் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவம் கையாளப் படுமா என்று தோழர். அட்டவுல்லா கேட்டதிற்கு ஆண்களுக்குக் கையாளப்படும் முறைதான் பெண்களுக்கும் கையாளப்படுமென்று அறிவித்தார்.

"நஞ்சு"

—வேலை-வில்லவன்

கி. மு. நான்காம் நூற்றாண்டு! விஞ்ஞான விடிவெள்ளி உலகிலேயே உதிக்காத—நாகரீகம் நாட்டிலே நடமாடாத — பகுத்தறிவுப் பகலவன் தோன்றாத பழங்காலம்!

கிரேக்க நாட்டு ஏதென்ஸ் நகரின் நெடும் வீதியின்விளிம்பில் ஒரு விசித்திர வீடு! ஒரு பெரிய குழியில், ஒரு பெரிய தொட்டி பொருத்தப்பட்டு வீடாக விளங்குகிறது. உள்ளே மையிருட்டு! அதன் மத்தியிலே ஒரு உருவம்!—விகாரத்தோற்றம்படைத்த—ஊரரால் வெறுக்கப்பட்ட—உபாத்தியாயரால் கல்விகற்க உதவாதவன் என்று விரட்டப்பட்ட உருவம்!

சிவப்படாத, சுருண்டு வளர்ந்திருந்த சிகை! பெருத்த தலை! தடித்த உதடுகள்! சோடு அமைப்புப் பெற்றப் பெரிய கண்கள்! அடர்ந்து வளர்ந்துள்ள தாடி! பருத்த உடல்! மெலிய கால்கள்!—உருவம்—விகாரமாக, வெறுக்கத் தகுந்ததாக அமைந்திருந்தாலும், உள்ளத்திலிருந்து திரண்டெழும் கருத்துக்கள் உயிருள்ளவை! விருப்பையூட்டக் கூடியவை! உலகிற்கு வேண்டியவை! வரவேற்கவேண்டியவை! வாழ்த்தத் தகுந்தவை!

அழகுள்ளவனே ஆண்டவனின் சிருஷ்டி, ஆண்மைமிகவன், அறிவுடையவன்-ஆற்றல்படைத்தவன், என்ற எண்ணங்களைக்கொண்ட ஏதென்ஸ் மக்களைத் தன்னுடன் வாதம் பேச-உரையாட-உண்மையை அறிய, வருமாறு வீதியின் ஓரத்திலே அவ்வுருவம் நின்றுகொண்டு வேண்டிக்கொண்டிருக்கிறது! ஆணவம் படைத்த ஏதென்ஸ் மக்கள் வைகிறார்கள்! —கையாண்டி செய்கிறார்கள் "நீ பெரிய ஞானியா?" என்று வாய் கூசாது வசைச் சொற்களால் வாழ்த்துகிறார்கள்!

வெட்கத்தையும், வேதனையுணர்ச்சியையும், வெகுளியையும், உதறித்தள்ளி உரம் பெற்ற உறுதியான உள்ளத்தோடு, உலகிற்குஉண்மையை எடுத்தோத, வருவார் போவாரை உரையாட வேண்டுகிறது அவ்வுருவம்.

ஒருவன், — வேலையில்லாக் காரணத்தால், உரையாடல் நிகழ்த்தி, வம்பிழுத்து, உதைபடச்செய்யலாம் என்ற நோக்கத்தோடு வருகிறான், வீதி ஓரத்திலே நின்றுகொண்டிருக்கும் விகார உருவம் படைத்த உத்தமனிடம்! உரையாடல்நடக்கிறது. பழங்கடவுள்களைப்பற்றியும்,—பணச்செலவுகளைப் பற்றியும்! வந்தவன் வாயெடுத்துப்பேச வழியின்றி விழிக்கிறான்! உணருகிறான் தன் மூடப்போக்குகளை! உள்ளத்திலே-ஊரரால் வெறுக்கப்பட்ட அவனிடம் அன்பு ஏற்படுகிறது. நஞ்சென்று நீக்கியவனிடம் நலமிருப்பதை அறிகிறான்; அறிவிக்கிறான் ஏதென்ஸ்மக்களுக்கு! வாதாடி புதுமை கண்டு வந்தார்கள், அன்று வைது—கைபாண்டி செய்த மக்கள்!

'பேய் உருவம் படைத்தவன்' என்றழைக்கப்பட்டவரை அவனுக்குக் கூடிய பெருமக்கள் புடைசூழ ஆரம்பித்தார்கள்! அவர்கள் கேள்விகளுக்கு பதிலை அவர்களையே கூற வைத்த அவன் திறமையை மெச்சினார்கள்! அவனுக்கு மாணவராக முன்வந்தார்கள் அன்று "மதிகேடனே" என்று முழக்கமிட்ட மக்கள்!

நாடு-நகரம், பட்டி-தொட்டி எங்கும் அவனைப் பற்றியே பேச்சு! "உதவாதவன்" என்று விலக்கிய அவனை, உரிமையோடு உறவு கொண்டாடினார்கள் ஊரார்!

இங்ஙனம், "உருவமல்ல, உள்ளக் கருத்துக்களே உலகிற்கு வேண்டியவை, பக்தியல்ல, பகுத்தறிவே பாராட்டப்படவேண்டியது, குருட்டு நம்பிக்கைகளல்ல, காரணக் கண் கொண்டுள்ள கருத்துக்களேகொள்ளவேண்டியவை" என்று ஊராருக்கெடுத்து ஓதி அவர்கள் உள்ளத்தைக் கலக்கி—பகுத்தறிவுப் புரட்சிசெய்த அந்தப்பெருந்தகையாளர்சாக்ரடீஸ் ஆவார். 'தத்துவஞானத்தின் தந்தை!' "வாழ்க்கைக்கு வழிவகுத்த உத்தமர்" என்றெல்லாம் இன்று உலகம் புகழும்பெருந்தகையாளரே அவர் முதலில்-மக்களின் மதிப்பைப் பெறுவதற்குமுன் "டையகனஸ்" பிறகு சாக்ரடீஸ்

ஆர்வமிக்க இளைஞர்களுக்கும், அறிஞர்களுக்கும் அவர் உரைகள் அமுதம்! ஆனால் வைதிகக் குட்டையில் ஊறிய மட்டைகளுக்கும், ஊரரை ஏமாற்றி வயிற்றை வளர்க்க வந்தவஞ்சகக் கூட்டத்திற்கும் அவர் உரைகளும், உபதேசமும், நெஞ்சையுருவும் அம்புகள்! நஞ்சு! கையடியுங்கூட!

"பரம்பரையாக பெரியோர்களால் போதிக்கப்பட்டு பரவிவரும் பழமையான கருத்துக்களை நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும்; வேண்டாதவைகளை உதறித் தள்ள வேண்டும்; வேண்டியவைகளை வரவேற்கவேண்டும்; ஏதுமறியாது எல்லவற்றையும் நம்பி முட்டாள்களாகக் கூடாது!" என்றும்,

'தேவதைகளுக்கும், மற்றும் பல கடவுள்களுக்கும் செலவழிக்கும் பணத்தைக் கொண்டு வழக்கு மன்றங்களமைத்து, மக்களுக்கு நீதி வழங்குதல் நலம்" என்றும்,

கூறிய காரணத்தால் அவர் அன்றைய ஆட்சியாளர்களுக்கும், ஆஸ்திகப் பெருமக்களுக்கும் ஆகாதவராகி விட்டார். ஆதரவாளர்களோடு, விரோதிகளும் தோன்றினார்கள். வேதனைப்படுத்தினார்கள் வழக்குமன்றத்திலே நிறுத்தினார்கள். ஊக்கத்தையும் உணர்ச்சியையும் அவர் இழக்கவில்லை!

"மக்களிடையே, புதுமையான—மனத்தைக் குழப்பும்-மதத்துவேஷக் கருத்துக்களை பிரசாரம் செய்துள்ள உனக்கு என்ன தண்டனை பொருத்தமானது தெரியுமா? "என்று கேட்கிறான் நீதிபதி! உடனே சற்றும் தயங்காது கூறுகிறார், மக்களிடையே மறுமலர்ச்சிக் கருத்துக்களை வெளியிட்டு மடமையை ஓரளவுக்கு மறைத்த எனக்குத் தண்டனையல்ல, தகுந்த பரிசு வழங்குதல்தான் முறை" என்றார்!

ஈவு இரக்கமற்ற, உண்மையை உணராத, வைதிகத்தில் ஊறிப்போயிருந்த உலுத்தர்கள், உயர் நெறியை உலகிற்கெடுத்தோதிய உத்தமனுக்கு மரண தண்டனையை விதித்தார்கள்!

"என்னைக் கொன்று விடுவதால் நாட்டிலே பகுத்தறிவுக் கொள்கைகள் இனிப்பரவாது, என்று எண்ணி ஏமாறுகிறீர்கள்; என்றாவது ஒருநாள் உண்மையை உணருவீர்கள்; அப்பொழுது வருந்தமும் வேதனையுமடைவீர்கள் உங்கள் போக்கை நினைத்து!" என்று முழக்கமிட்டு கூறுகிறார் தண்டனைவிதித்த தலைவர்களிடம்!

குருவைக் கொல்லப்போவதை அறிந்த மாணவர்களும் குடும்பத்தினரும் கதறினார்கள்! கண்ணீர் வடித்தார்கள் "வேற்று நாட்டிற்கு ஓடி உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும்!" என்று வழிகாட்டினார்கள்! ஒப்புக்கொண்டாரில்லை! முப்பது நாட்கள் தன் மாணவர்களுக்குச் சிறைக்கோட்டத்திலே தத்துவ ஞானம் போதித்துவந்தார். அவர் உள்ளத்திலே — முகத்திலே — உரையிலே, அச்சமோ, பயமோ சிறிதும் இல்லை!

கடைசி நாள்!— மரண நாள்! அன்று—அவர் தன் நண்பன் ஒருவனுக்குக் கடனாகக் கொடுக்கவேண்டிய ஒரு சேவலைத் தந்து கடனைத் தீர்க்கும்படி மற்றொருவனிடம் கூறி, அழுகின்றவர்களைத் தேற்றி, வாழ வழிகாட்டி, தன்னெதிரே காவலாளி ஒருவன் நீட்டிக்கொண்டிருந்த நஞ்சுக் கோப்பையை வாங்கி பருகி, உயிர் நீத்தார்! பூத உடல் சாய்ந்தது. புகழுடல் நிமிர்ந்து நின்றது; நின்று வருகிறது!

* * *

மக்களின் மடமையில் மூழ்கி நாட்களைக் கழிப்பது நஞ்சாகத் தோன்றிற்று அவருக்கு!

பழமையைப் புதைத்து புதுமையைப் பரப்பவேண்டுமென்று அவர்கூறினது நஞ்சாக இருந்தது நாட்டு மக்களுக்கு! அவர் உருவம், உபதேசம், உரையாடல், அவர் உயிரோடிருத்தல் — ஆகியவையனைத்தும் நஞ்சாக இருந்தது வஞ்சக சமூகத்திற்கு!

அவருக்குக் கிடைத்தப்பரிசு நஞ்சு! நாட்டை நன்முறையிலமைக்க, — மக்கள் மனதை மாற்ற,—பகுத்தறிவைப் பரப்ப—நாகரீகத்தை நாட்டிலே நிலவச் செய்ய, முன்வந்து செயலாற்றிய அவருக்குக் கொடுக்கப்பட்டப் பரிசு நஞ்சு!

காலம் கடந்தபின் — கருத்திலே மாற்றங்கண்ட பின், உத்தமனின் உயிரைப் போக்கிய தங்கள் செய்கையே, நஞ்சாகத் தோன்றியது அந்நாட்டு மக்களுக்கு!!

திருமணம்

சேலம் மாவட்டம் களக்காணியில் 12—3—50 அன்று தோழர் மு. வரதராசன்—தோழியர் அ. பொன்னம்மாள் திருமணம் நடைபெற்றது தோழர் சி. இலக்குவனார் எம். ஓ. எல். தலைமை தாங்கினார். தோழர்கள் மு. கருணாநிதி, வேலாயுத, சாமிநாதன் பரமசிவம் ஆகியோர் திருமணங்குறித்துப்பேசினர்.

சென்னை நகரக்கமிஷனருக்கு தேனீர் விருந்து

———(0)———

திறமையான நிர்வாகத்துக்குப் பாராட்டு

சென்னை, மார்ச். 18—

சென்னை நகர கார்பொரேஷன் கமிஷனர் தோழர் நரசிம்மம் அவர்களுடைய பதவிக்காலம் மேலும் மூன்று ஆண்டுகள் நீடிக்கப்பட்டதால், அவரைப் பாராட்ட வட்லண்டு ஒட்டலில் ஒரு தேனீர் விருந்து நடத்தப்பட்டது.

தோழர்கள் அழகிரி சிங்கநாயுடு எம். ராதா கிருஷ்ணன். கமலநாபம் மேயர் செரியன் ஆகியவர்கள் தோழர் நரசிம்மத்தின் திறமையைப் பாராட்டிப் பேசினார்கள்.

தோழர் அழகரிசிங்க நாயுடு பேசுகையில் நகரில் போதிய வைத்திய வசதி இல்லையென்றும், பல ஆயிரக் கணக்கான குழந்தைகள் படிப்பதால் போதிய வைத்திய கூடங்கள் நகரில் திறக்கப்பட வேண்டுமென்றும் கூறினர். கமிஷனர், நரசிம்மம் இதற்கானவற்றைச் செய்வாரென்று தான் நம்புவதாக அறிவித்தார்.

தோழர் கமலநாபம்பேசுகையில், கமிஷனருடைய வேலையின்தொல்லைகளை விளக்கினார். எல்லா வேலைகளையும் தோழர் நரசிம்மம் அவர்களே நேரில் பார்வையிடுகிறார்களென்றும், நகரில் நல்ல பெயரெடுத்துக்கொண்ட சிறந்த கமிஷனர்களில் அவரும் ஒருவரென்றும் அறிவித்தார்.

மேயர் செரியன் கமிஷனருடைய ஒத்துழைப்புத் தன்மையை விவரித்துக்கூறினர்.

தோழர் நரசிம்மம் பதிலளிக்கையில் நகராண்மைக் கழகம், நல்லதைச் செய்ய முற்பட்டபோது எப்பொழுதும் தடையாக இருந்ததில்லையென்றும், வேலைகளால் தொல்லை ஏற்பட்டாலும் பொதுமக்கள் பாராட்டுதலும், நகராண்மைக் கழக அங்கத்தினரின் ஒத்துழைப்பும் தமக்குப் பெருமகிழ்ச்சி தந்ததாக அறிவித்தார்

நிதி மந்திரி கோபல் ரெட்டி, தொழில் மந்திரி பெருமாள்சாமி ரெட்டி, நீதிபதிகள் பலர் தேனீர் விருந்தில் கலந்துகொண்டனர்.

தோழர் வி. முனுசாமி தேனீர் விருந்தில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார். (ந. நி)

மக்கள் நலம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி,

கள் அவர்களுக்குக் கிட்டுவதில்லை என்பதேயன்றோ!

எனவே, இப்படிப்பட்ட நிலை மாறி, கிராமங்களும் நகர மக்களைப்போல சகல வைத்திய வசதிகளையும் பெற்று நல்வாழ்வு வாழ வேண்டுமானால், நகரத்திலே குழுமியிருக்கும் உயர்ந்த மருத்துவக் கல்வி பயின்ற மருத்துவர்கள் சிலரேனும் கிராமங்களுக்குச் சென்று பணியாற்ற வேண்டுவது மிகமிக இன்றியமையாததாகும்.

மற்றும், மருத்துவக்கலை தாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று, டாக்டர் லட்சுமணசாமி குறிப்பிட்டிருப்பதும் கவனிக்கற்பாலது. மருத்துவக்கலை மட்டுமல்ல, மற்றுமுள்ள கலைகள் பலவும், அரசியலார் சட்ட திட்டங்களும் தாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட வேண்டியவைகளாகும். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால்தான், உண்மையிலேயே மக்கள் நல்வாழ்வு பெற இயலும்

தஞ்சைமாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

1 என்னிடமிருந்து தி. மு. க. அங்கத்தினர் சேர்க்கும் புத்தகங்கள் வாங்கிச்சென்ற கிளைக் கழகங்களும், மற்றத் தோழர்களும் 22—3—50க்குள் தலைமைக் கழகம் மாவட்டக்கழகம் களுக்குச்சேரவேண்டிய தொகை பைசு, ரசீதுகளையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

2. மாவட்டக்கழகம் அமைக்க வேண்டியிருப்பதால், கிளைக்கழகங்கள், இரண்டு பிரதிநிதிகள் வீதம் தேர்ந்தெடுத்து 30—3—50க்குள் எனக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

3. தஞ்சை மாவட்டச் சேரற்று அமைப்புக் கூட்டம் 2-4-50 ஞாயிறு மாலை 4 மணிக்கு கும்பகோணம், பஞ்சுக்காரத் தெரு, பெரியார் மாளிகையில் நடைபெறும். அச்சமயம்கிளைக் கழகங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகள், இவைவே அழைப்பாககொண்டு, தவறாமல் வரக்கேட்டுக்கொள்கிறேன்.

கே. கே. நீலமேகம்
தஞ்சை மாவட்ட தி. மு. கழக அமைப்பாளர்
பஞ்சுக்காரத்தெரு, கும்பகோணம்.

திருச்சி மாவட்டத்தில் தி. மு. க. கூட்டங்கள்

21-3-50 லிருந்து திருச்சி மாவட்டத்தில் தோழர்கள் சி. பி சிற்றரசு ஏ. பி. தர்மலிங்கம் ஆகியோர் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி சுற்றுப் பிரயாணம் செய்து, சொற்பொழிவாற்றுவார்கள்.

மார்ச் 21-ந் தேதி மேலப்பழுவூர் (அரியலூர் தாலுக்கா) 22-ந் தேதி அரியலூர் 23-ந் தேதி சோபனபுரம் (முசிறி தாலுக்கா) 24-ந் தேதி மேட்டுப்பாளையம் (முசிறி) 25-ந் தேதி தாத்தையங்கார்பேட்டை (முசிறி) 26 ந் தேதி துறையூர் (முசிறி)

மற்றவை பின்னர் அறிவிக்கப்படும். சுற்றுப்பிரயாணத்தில் திருச்சி ராபி அண்டு கோ, ஒலிபெருக்கிக் கருவி கொண்டுவரப்படும்.

சனி, ஞாயிறுகளில் பொன்மலைத் தோழர் பராங்குசம் அவர்களும், சில ஊர்களில் தவுட்டுப்பாளையம் தோழர் டி. பி. மூர்த்தி அவர்களும் கலந்துகொள்வார்கள் என மாவட்டச் செயலாளர் தோழர் ஜி பராங்குசம் தெரிவிக்கிறார்.

இனி நடப்பவை

சோழவாணி— இவ்வூர் தி. மு. கழகச் சார்பில், 30-3-50 அன்று அழகிரிசாமி நினைவு நாள் விழா கொண்டாடப்பெறும். அன்றிரவு "யார் குற்றவாளி?" என்னும் நாடகம் நடைபெறும். விழாவிலும் நாடகத்திலும் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் கலந்து கொள்வார்கள்.

* * *

சேலம்வூர்— இவ்வூர் தி. மு. கழகத்தின் அலங்கவிழாப்பொதுக் கூட்டம், 21—3—50ல் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, இரா. துரைராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

ஓரங்க நாடகம்

நான்கு தூண்கள்

த. கிருஷ்ணமூர்த்தி

காட்சி 1

நேரம்:— பகல்
உறுப்பினர்:— அரசனும் அமைச்சனும்
இடம்:— அரண்மனை

அமைச்சன்:— முடி மன்னரே! வணக்கம்.

அரசன்:— வணக்கம் அமைச்சரே!

அமைச்சன்:— மன்னரே! நாம் ஆட்சி முறையில் அமைப்பைப்பற்றி அன்று முதல் ஆலோசித்துதான் வந்தோம். ஆனால் இனிமேல் ஆலோசிப்பதற்கு சமயம் இல்லை. வேளை நெருங்குகிறது. மக்கள் மனதிலே வேதனை தாண்டவமாடுகிறது. வீணையின் நாதம் எழும்பாது இனிமேல். வேதனையின் கூக்குரல் தான் விண்ணைப் பிளக்கும். அதற்குள் ஆட்சி முறையில் சில மாற்றங்களை சட்டரூபமாக இயற்றவேண்டும்.

அரசன்:— அமைச்சரே! சட்டம் என்பது தனி ஒருவனின் மனதில் எழுந்துவிட்டதல்லவே! மக்களின் ஆமோதிப்பும் வேண்டும்.

அமை:— ஆனால் அரசே! ஏழைகள் ஏங்க, அவைகள் கண்டு கனவான்கள் கண்டு களிக்கும் நிலையிலிருக்கும்வரை, மக்களின் பூரண ஆமோதிப்பும் ஒத்துழைப்பும் எங்கே இருக்கும்? பணம் பசியின் பசப்பில் ஆளை மயக்கும் ஒரு கருவி அப்பா! செல்வர்களிடம் தனக்குத் தாசனாகும் ஓர் தாசிப் பெண்! வேளைக்கேற்ற தகுந்த வேடம் பூண்டு ஆளை வெல்லும் ஒரு வேசி! அதனால் செல்வந்தர்களும், சீமான்களும் நம் சட்டத்தைக் கண்டு சினம் கொள்வர்; சில வேளையில் சீறி விழுவர். அரசாட்சி செல்வருக்கா? இல்லை ஏழைகளுக்கா?

அர:— சமூகம் சீர்திருத்தமில்லாமல் அரசாட்சியும் சீர்திருந்தாதுதான். சாதி, சமய ஒழிப்பைக் கண்டு சமானமின்றி சீறுவர். ஆனால் சாதி சமய பேதமற்ற அரசாட்சிதான் இன்று வேண்டும். ஏழை-செல்வந்தர் எனும் நிலையும் மாறவேண்டும். வழி இருக்கிறது சட்டத்தின் மூலம். ஆனால்......

அமை:— ...வழி வந்துவிடுமே என பயமா? பாலை நிலத்தைச் சோலை நிலமாக்கும்பொழுது அங்கிருக்கும் மணல்மேடுகள் கூடத்தான் மனம் கசியும்; மருளும்; சில வேளைகளில் வெறுப்பு கொண்டு சீறும், வேதனைப்படும். அதனால் சோலை நிலத்தைப் பாலை நிலமாக்க முடியுமா? இல்லை, பாலை நிலத்தை வெறும் பாலை நிலமாகவே இருக்க விட்டுவிட முடியுமா? இன்றைய உலகம், பணத்திமிரிலே புரளும் கொடுமைகளையும், சாதி சமய வெறியர் சண்டைச் சச்சரவுகளையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அது முதலில் ஒழியவேண்டும். சமத்துவம் உலகில் பரவவேண்டும். மக்களால் செய்ய முடியாத காரியத்தை மக்கள் தலைவன் சட்டத்தின் உதவியால் செய்வதால் தவறில்லை.

அர:— ஆம் அமைச்சரே! காதலித்த பெண்ணின் தற்கொலை, ஏழையின் தற்கொலை, பூசாரி கேட்கும் விலங்குபலி, விதவை சிந்தும் கண்ணீர் — இவைகள் ஒரு சமூகத்திற்கு மட்டுமன்று, ஒரு நாட்டிற்கே எவ்வளவு கேடு விளைவிக்கின்றன!

அமை:— காதலர்களின் சாதிசமயவெறியால், ஏழையின் கொலை பணக்காரனின் வலைத்தனத்தினால்: உழைக்காமல் உண்டு ஊனை வளர்க்கும் உயர்ந்தவன் கடவுள் போல் கேட்கும் பலி, நடைப்பிணமாக உலகில் வாழும்போது நடமாடும் கிழச்சி, அதுவும் பெண் இனத்தில் ஒருபெரிய "இல்லாத தன்மை" அரசனே! இவை தெருவில் சிந்தவைதான் மக்களின் கண்ணீர்! சாதிசமயம், ஏழை பணக்காரன், உழைப்பாளி உல்லாசி, பூசாரியும் பலிபீடமும், இல்லாதது உள்ளது — இவை இன்றில்லை என்று மாறுகிறதோ அன்றே நாட்டின் நலிவு தீரும் மன்னனே! புதுமைபிறக்கும் சொல்லுங்கள்! புல்லறிவாளர்கள் பழமை மடியும் புண்ணியநாள்! அதுவரையில் நாடு நாடன்று; மக்கள் மக்களன்று; நாடு ஒரு சுடுகாடு, மக்கள் அதில் பிணந்தின்னும் மாக்கள். இந்நிலையை சீர்திருத்தி அமைப்பது ஒரு முக்கியமான முதற்கடமை அரசே!

அர:— ஆம்! அன்று நகர சோதனைக்குச் சென்ற வேளையில் நடந்த நிகழ்ச்சி இன்னும் என் மனதை விட்டகலவில்லை. அதை மறுமுறை நினைத்தாலும் அப்பப்பா! எவ்வளவு பயங்கரம்! மனிதனை மனிதனுக்கு உதவாமல் பண்ணியிருக்கும் சாதி சமய வெறிகளும் நடமாடும் ஆட்சி இதுவே! நலிவடைந்தோரை அழுத்தும் அக்கிரமாட்சி அல்லவோ! அந்தக் கடந்த நிகழ்ச்சிகளை இன்னுமொருமுறை நினைக்க வேண்டியிருக்கிறது அமைச்சரே!

கடந்த நிகழ்ச்சியின் சுருக்கம்:-

காட்சி 2

இடம்:— ஒரு பாழடைந்த சத்திரம்
நேரம்:— இரவு
உறுப்பினர்:— அரசன், அமைச்சன், காதலன், காதலி.

(அரசனும் அமைச்சனும் நகர சோதனைக்கு வருங்கால் அச்சத்திரத்தில் கேட்கும் உரையாடல்)

காதலன்:— துணிந்து விட்டாயா காதலி?

காதலி:— துணிந்து விட்டேன் காதலரே!

காதலன்:— இதற்கு குற்றவாளி நாமல்ல! சமூகம். அதிலேயும் சாதிவெறியர்கள். இந்த உலகில் நாம் அவருக்கு அடங்கி வாழ வேண்டுமானால்தான், வேதனையுடன் காலம் கழியும். கயவர்கள் அழிவர்.

காதலி:— நாணம் தெரியா கோழையர்களால் இன்று இரு குல-விளக்குகள் அழிகின்றன!

காதலன்:— ஆம் கண்ணே! நாம் காதலுலகில் மறுபடியும் சந்தித்து அங்கேயே சாசுவத இன்பத்தில் இருப்போமாக! செல்வோமா?

காதலி:— காதலரே தயார்!

(இருவரும் தற்கொலை செய்து கொள்கின்றனர். அரசனும் அமைச்சனும் கேட்டு உள்ளே ஓடோடி வருகின்றனர்.)

அர:— என்ன இது கொலையா?

அமை:— ஆம் அரசே! அதுவும் தற்கொலை. நெஞ்சமே சடலம் அதிர்ந்து இவ்விருவரின் பிணக்கட்டைகளும். இனி மீட்க இயலாது. மாண்டுவிட்டனர்...... அரசே! இங்கே பாரும் பருவ எண்ணம் மதி எழுதியதுபோலும். பாதகர் என கூறியிருக்கிறது இதில்

அர:— யாரை?

அமை:— சாதி வெறியர்களை!

அர:— காரணம்?

அமை:— ஆராய்ச்சிக்கு இது இடமல்ல! அரண்மனை வாரும் செல்வோம். (போகிறார்கள்)

காட்சி—3

இடம்:— ஓர் ஏழையின் வீடு.
நேரம்:— இரவு
உறுப்பினர்:— ஏழை, செல்வந்தன்.

செல்:— அடே, அப்பா! அழுவதால் நான் உன்னிடம் இரக்கம் காட்டமாட்டேன். எனக்குப் பாவத்தைவிட பணமே பெரிது!

ஏழை:— ஐயா! தருகிறேன். இன்னும் சில தினங்களில் இல்லாதவன் எங்கு செல்வேன்?

செல்வந்தன்:— சீச்சீ, சொல்லாதே, இதைப்பற்றி எனக்குக் கவலையில்லை, மார்க்கம் எப்படியிருந்தாலும் எனக்குவரவேண்டியது பணம்.

ஏழை:— கடனைக்கொடுக்க கஷ்டகாலம் எனக்கு வந்தாலும் கள்ள மனம் மாத்திரம் வராது. உழைத்து தருவேன். இல்லையேல் பாடுபட்டு கடன் வாங்கியாவது தருவேன். சின்னாள் பொறுத்திருங்களையா! கெஞ்சுகிறேன்.

செல்வந்தன்:— கெஞ்சப்படாதே! பணம் பெறும்பொழுது ஒரு எண்ணம், பணம் தரும்போது ஒரு எண்ணமா? பொய் சொல்லாதே. உன்னை கைப்புடைத்து நாணயமாக்கப் பணம் வாங்குகிறேன் பார்.

(என கையைப் புடைக்கிறான். ஏழை அலறுகிறான். இதைக் கேட்ட அரசனும் அமைச்சனும் ஓடிவருகிறார்கள்.)

அரசன்:— அன்பா! நீ புடைப்பது புண்ணியமா? இத்தொழில் கண்ணியமா?

செல்வந்தன்:— நீ யார் கேட்க? எங்களிருவருக்குள் ஆயிரமிருக்கும்.

அரசன்:— ஆயிரம் இருக்கலாம். ஆனால் அத்துடன் அநீதியும் இருக்க முடியாது. நீதி வேண்டும் அன்பா; நல்ல நெறி வேண்டும்!

செல்வந்தன்:— உபதேசம் எனக்கல்ல! இந்த பயலுக்குக் கூறு. கடன்பட்ட இவன் கொடுக்க கண்ணியமாய் இல்லாத பொழுது நீ, புண்ணியத்தைப் பற்றி எனக்குப் புத்தி புகட்டுகிறாயே!

அரசன்:— நாளை காலை இவர் தருவார் இதற்கு நான் உறுதி கூறுகிறேன்.

செல்வந்தன்:— அடித்து வாங்கும் வேளையில இந்த ஆள் வந்து இதைக்கெடுத்துவிட்டான். நாளை காலை வருவேன். பணம் தராவிட்டால் பின்பு இந்த உன் பிணம்தான் வாசலாகும்! உணர். (செல்கிறான்)

அரசன்:— கவலைப்படாதே அன்பா! நீ பட்ட கடனை நான் தருகிறேன். நிம்மதியாயிரு!

ஏழை:— நல்ல வேளையில் உதவி செய்தீரய்யா! உமக்குக் கோடி புண்ணியம். ஏழைகளுக்கு எமன் வேறு ஒருவருமல்ல, பணக்காரரேதான். அதிலும் வட்டிக்கு ஆசைப்பட்டு என்னைப்போன்ற ஏழைகளை மிகவும் இம்சிக்கும் இரக்கமற்ற இருதயமுள்ளவரேதான்.

(அரசனும் அமைச்சனும் செல்கின்றனர்)

காட்சி 4

இடம்: ஒரு கோயில்
நேரம்:— இரவு
உறுப்பினர்:— குரு, சிஷ்யன்

(அரசனும் அமைச்சனும் ஒற்றுக் கேட்கின்றனர்)

குரு:— சிஷ்யா! ஆயிற்றா?

சிஷ்யன்:— ஆயிற்று குருதேவ்!

குரு:— கொண்டு வா. அவசர அவசரமாகச்சமைத்ததில்லெல்லாம் ஒன்றுக்கும் ஒருவருமில்லை. நீயும் இருக்கிறாயே ஒரு அன்னந்த! சிஷ்யா! இன்னும் என்ன தாமதம்.

சிஷ்யன்:— பால் காய்ச்சுகிறேன் குருதேவ்! ஆகாரத்துடன் பழமும் வைக்கட்டுமா?

குரு:— சிஷ்யா! உனக்குச் சிந்தனையே சிறிதுமில்லை. என் போன்ற கடவுளின் பிரதிநிதிக்கும் பாலும் பழமும்தானே உண்மையானதேவையாகும். பழங்கள் பல விதசக்திகள்; பாலில் இருக்கிறது இச்சை. இதைதான் எனக்கு மூலப்பொருள் மறந்துவிட்டாயா!

சிஷ்யன்:— மறப்பேனா குருதேவ்!

குரு:— அதுதானே கேட்டேன்.

சிஷ்யன்:— குருதேவ்! ஒரு சந்தேகம். உழைக்காமல் இப்படி உண்டு வருவது எனக்கு என்னமோ போலிருக்கிறது. மனச்சாட்சி குத்துகிறதே குருதேவ்!

குரு:— உலகம் தெரியாத இளைய மனம். பட்டால் தவறு விடும். சிஷ்யா! உலகத்தின் படைப்பு இரண்டுவகைகளுடையது. ஒன்று உழைத்துத்தரும் இனம். மற்றொன்று அதைக்கொண்டு உண்டு களிக்கும் இனம்! இதில் நாம் இரண்டாவது இனம்! இது தெரியவில்லையே உனக்கு

சிஷ்யன்:— தெரிகிறது குருதேவ்! ஆனால் இது பாவமாக எனக்குப்படவில்லையே.

குரு:— அநுபவம் போதாத கட்டை. அதுவும் கடவுளின் பேரால் காசு! பகவானின் பேரால் பலி! இதுதான், எம்மைப் போன்றோர் பிழைக்க ஆண்டவன் அருளிய வழி! அவனன்றி வேறில்லையே அடேயப்பா! பணக்காரருக்கு வரும் கலக்கமே பகவான் என்றுணர்ந்து நிறைவேற்றுவார். அதை பக்தர்கள் ஏற்று நடக்கவா எவ்வளவோ வழிகள் உண்டு. ஆனால் அவையெல்லாம் விழிப்புடன் சாதித்துக்கொள்ள வேண்டும்.

சிஷ்யன்:— ஆனால் குருதேவ்! ஆகாரத்திற்கொரு பூசை, அவர்களுக்கொரு பூசை, பணக்காரருக்கொரு பூசை, பக்தர்களுக்கொரு பூசையா?

குரு:— ஆம். பூசை பலவகைகளுடைத்து. அத்துடன் பூசையில் ஏழைக்கொரு விதமாய் பணக்காரருக்கு ஒருவிதமாய் நடக்க வேண்டுமென்பது என் நாதன் கட்டளை. நாளை திருவிழா. பணம் ஒருபுறம் குவியும், படைப்பு ஒருபுறம் குவியும். இதின் எண்ணங்கள் பக்கமே நீ அபிசித்தையுடன் இருக்க வேண்டும். பூசனையில் பணம் வைப்பரியும்!

சிஷ்யன்:— உணர்ந்தேன் குருதேவ். உணவருந்தவாரும்.

குரு:— ஓம் சச்சிதானந்த!

(உணவருந்தசெல்கிறான்)

அமைச்சன்:— அரசே! இந்த வீணர்கள் வாழ வழி வகுத்துக் கொடுப்பதும் நம் மக்களேதான்.

அரசன்:— ஆம், சரி வாரும்.

காட்சி 5

இடம்:— ஒரு பாழும் கிணறு.
நேரம்:— இரவு
உறுப்பினர்:— விதவை, அரசன், அமைச்சன்.

அமைச்சன்:— அரசே! அங்கே பாரும்! ஒரு பெண் அக்கிணற்றை நோக்கி.........!

அரசன்:— ஆம். ஓடி வாரும். (கிணற்றில் விழச் சென்ற விதவையைத் தடுத்து நிறுத்தி)

அரசன்:— பெண்ணே! இது என்ன பாதகத் தொழில்!

விதவை:— ஐயா! உமக்குக் கோடி புண்ணியம் உண்டாகட்டும் விடுங்கள். நான் இந்த உலகில் வாழத் தகுதியற்றவள்.

அரசன்:— ஏன்? உன் வாழ்வைப் பற்றி நீ வெறுக்கிறாயா? ஆனால் இந்த உலகத்தையே நீ வெறுக்கக் காரணம்?

விதவை:— ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி இருக்கும் பொழுது இந்த உலகத்தின் மேல் வெறுப்பு ஏற்படாமலிருக்க முடியுமா?

அரசன்:— பெண்ணே! இப்படி வர, உனக்கென்ன கஷ்டம் ஏற்பட்டது? அதைக் கூறு. முடிந்தளவு உதவி செய்கிறேன்.

விதவை:— நீர் செய்யலாம். ஆனால் அதற்கு இந்த சமூகம் இடம் கொடுக்காது. நான் ஒரு பாலிய விதவை. வாலிபம் என்னைப் பருவ உணர்ச்சிக்கு அடிமை யாக்கியது. வைதிகம் எனக்கு வேலியாகவே இருந்தது. கட்டுப்பாடுகளை என்னால் தாங்க முடியவில்லை. 'அந்த' உணர்ச்சியை அநுபவித்தேன். ஆனால் அன்றையிலிருந்தே என்னை சமூகம் விபசாரி என்று ஒதுக்கி விட்டது. அதனால் தாய் தந்தையர்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள். இத்தனைக்கும் காரணம் நான் ஒருத்தி என்பதை அறிந்தேன். சிந்தித்ததில் எனக்கு தற்கொலையைத் தவிர ஒரு மார்க்கமும் கிடைக்கவில்லை!

அரசன்:— ஏன்? நீ அந்த வாலிபனுடனேயே மறுவாழ்வு வாழலாமே!

விதவை:— வாழலாம். ஆனால் ஆண்கள், பெண்களை ஒருமுறைதானே ஒப்புகின்றனர். எந்த மலரில் தேன் குறைகிறதோ அந்த மலரைவிட்டு வேறு மலரைத் தாவும் வண்டுகள்தானே! இத்தகைய உரிமைகள் இந்த உலகில் ஆண்களுக்குத்தானே இருக்கிறது. பெண்களுக்கு ஏது? பெண்கள் ஆண்களின் போகக் கருவிகள். அத்துடன் கணவன்மார்களின் மனைவி இறந்தால் அவன் மறுமணம் செய்துகொள்கிறான். ஆனால் கணவன் இறந்தால் அந்த ஆன்மாத்திரம் தான் இறக்கிறதா? அவனுடன் இன்பம், உரிமை, அதிகாரம், ஆட்சி எல்லாம் சேர்ந்தல்லவா இறந்துவிடுகின்றன!

(தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க)

சினிமா சீதை

[கலைமணி]

பிரேமா 'ரிடையர்ட் சப் ஜட்ஜ்' சுந்தரமையரின் பெண். பெயருக்கு ஏற்றாற்போல் கண்டவர்களையெல்லாம் தன் மீது ப்ரேமை கொள்ளச் செய்யும் அளவுக்கு அழகுப்பதுமையவள்......

"கொவ்வைச் செவ்விதழும்,
குமின் சிரிப்பும்"..............

என்று எவரோ ஒருவன் ஒரு அழகிய சிற்பத்தைப் பார்த்துப் பாடினானாம். அவன் மட்டும் இப்போதிருந்தால்......

"லிப்ஸ்டிக் உதட்டிலே
நெளியும் புன்சிரிப்பு பிரேமா"....

என்று பிரேமாவை வர்ணிக்கக்கூடும். அந்தக் கண்களின் இமைகளிலே அட்பம் அந்தக் கருமை மட்டும் நூறுகுதிரை காந்தச் சக்தி கொண்டது. பார்ப்போரை மயக்கி சித்தத்தை சிதறடிக்கும் திறன் வாய்ந்தது.

ஏன் நீட்டுவானேன்?...... அவள் ஓர் "அழகின்எல்லை"!

கல்லூரியில் பி. ஏ. படித்துக் கொண்டிருந்தாள். இன்னும் கலியாணமாகவில்லை பட்டத்தைப் பெற்றுக் கொண்டு பதியோடு வாழ்வது என்று முடிவு செய்திருந்தாள். தந்தை குறுக்கே விழுந்து தடுக்கவில்லை "நம்ப குட்டி முடிவே நம் முடிவு" என்று கூறி பெருமைப்படும் தற்கால சீர்திருத்தவதியவர். ஆனால் உச்சி தலையிலே மட்டும் இரண்டு மூன்று மயிர்களைக் கத்தரிக்காமலே வைத்திருந்தார். அது ஏனோ எனக்குத் தெரியாது!

'பென்ஷன்' வாங்கிக் கொண்ட சுந்தரமையர் சும்மாயிருப்பது சுத்த சோம்பேறித்தனம் என்று எண்ணினார். ஏதாவது ஒரு 'பிஸினஸ்' தொடங்கினால் நல்லது என்று அவர் மனம் நினைத்தார். நினைப்பு நீண்டது.

தன் மகளிடம் யோசனை கேட்டார். கலையுள்ளம் படைத்த அவள் "ஆமாம் அப்பா ஒரு சினிமாப் படம் எடுக்கலாமே" என்று தன் கருத்தைக் கூறினாள்.

'வியாபாரத்துக்கு வியாபாரம், கலைத்தொண்டுக்குக் கலைத்தொண்டு' நல்ல திட்டம் 'பேஷ் அப்படியே செய்வோம் அம்மா' என்றார்.

என்ன படம் எடுப்பது? மூளையோடு போராட வேண்டிய கட்டம். பிரேமா ஒரு லிஸ்ட் தயாரித்தாள் 'வாலிப உணர்ச்சி, வயோதிக காதல். கல்லூரிப் பெண், சாமக் கோயில, இளைஞர் உலக......நீண்டது லிஸ்ட்.

'சப்ஜட்ஜ்', ஐம்பதுவயது கடந்தவர். காதல் போர்க்களத்திலே விளையாடிக் களைத்தவர்.

'சே, சே, இதெல்லாம் வேண்டாம் ஏதாவது பக்தி படமா எடுப்போம்' என்றார். அவரின் வார்த்தையை அப்படியே ஆமோதித்தாள் அவரின் மனைவி சாவித்திரிஅம்மாள்.

'சப்ஜட்ஜ் நினைத்தார்... 'கும்பகர்ணவதை, கோவர்த்தனகிரி, பப்ரவாகன, மார்க்கண்டு, ஏமலோக புராணம், ருக்மாங்கதன் பூமியின் ஊரியார்"......அவர் 'லிஸ்ட்டும்' தள்ளப்பட்டது.

கடைசியாக சாவித்ரியம்மாள் கட்டம் வந்தது.

"கற்புக்கரசி நளாயினி அழியாத பத்னி அல்லமா, அன்னப்பூரணி, சொர்ண பூரணி, மாங்கல்ய சக்தி, மகாலக்ஷ்மி விரதம், சீதையின் மீட்சி...சீதையின் சீதையின் மீட்சி... சீதை"......

நல்ல பெயர்......நாஸ்திகம் பரவும் இந்த நாளில், ஆஸ்திகத்தை வளர்த்தாற்போலவுமிருக்கும். எல்லோரும் அதையே சிபார்சு செய்தனர்.

மறுநாளே 'பிரேமா புரொடக்ஷன்' என்ற பலகை தொங்கியது. அச்சுதராமன் வீதி 63-ம் நெ பங்களாவில். பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளிவந்தன. அடுத்தாற்போல் என்ன? 'ஸ்டார் செலக்ஷன்'!

சீதையின் பாத்திரத்துக்கு திருமதி விமலா, கமலா, அமலா, நர்தினி, சந்தினி... யார் யாரையோ நினைத்தனர். மனம் திருப்திப்படவில்லை.

பிரேமா 'நானே நடிக்கிறேன் அப்பா' என்றாள். ஜட்ஜ் தயங்கினார். ஆனால் மகள் செய்த முடிவைத்தான் அவர் மறுக்க முடியாதே!

சாவித்ரி அம்மாள் 'சீதையின் பாத்திரத்தை நம்ம குழந்தை ஏற்று நடிப்பது எவ்வளவோ புண்ணியமாச்சே' என்றாள். இறுதியாக, பிரேமாவே நடிப்பது என்று முடிவாயிற்று.

மற்றப்படி ராவணன், ராமன், அநுமான், லக்ஷ்மணன் போன்ற பாத்திரங்களுக்கெல்லாம் ஆட்கள் பொறுக்கப்பட்டது

கதை, வசனம் 'பாகவதர் ஹரிகிருஷ்ணராவால்' எழுதப்பட்டது.

ஏன் படத்தைச் சுடவும் தொடங்கிவிட்டார்கள். முதற்சீன் 'ராமராவணப் போர்' பிரமாண்டமான சீன் ஜோடனையோடு பல்லாயிரக்கணக்கான ஆட்களை வானரப் படைகளாகவும், அரக்கர்களாகவும் வேஷமிடச் செய்து திரும்பத் திரும்ப ஒத்திகை விட்டுச் சுட்டனர் படத்தை. ராவணன் பாகத்தை ஏற்று நடித்த அரியாமங்கலம் கஜகர்ணராவ் அற்புதமாக நடித்துவிட்டார் அநுமாராக நடித்த குண்டோதர கனபாடிகளே வெளுத்து வாங்கிவிட்டார். ராமனாக நடித்த சது அனந்தசயனமோ அப்படியே எம்பெருமானாகக் காட்சியளித்தார்.

'சப் ஜட்ஜ்' அவர்களுக்கு பரம திருப்தி. பணத்தை வாரியிறைத்து படத்தை எவ்வளவு விரைவில் வெளிப்படுத்த முடியுமோ, அவ்வளவு தீவிர முயற்சி எடுத்துக்கொண்டார் அடுத்து பலகாட்சிகள் எடுக்கப்பட்டன. இலங்கைக்குப் போய் சிலகாட்சிகளைப் படம் பிடித்தனர் இனி கடைசிக் காட்சிதான் மிச்சம்! அதுதான் 'சீதையின் மீட்சி.'

'சீதை அரக்கனாகிய இராவணனிடம் பல மாதம் சிறைப்பட்டுக் கிடந்ததால், பொது மக்களின் சந்தேகத்துக்குள்ளாகலாம். ஆகவே இராமன் சீதையை தீயில் குளித்துத் தன் பதிவிரதா சக்தியை உலகுக்கு மெய்ப்பிக்கச் சொல்கிறான், அதன்படி சீதை தீயில் குதித்தெழுகிறாள்" இந்தக் காட்சியோடு படம் முடிவடைகிறது.

தீ குளியல் காட்சி அன்று ஷூட்டிங். டைரெக்டர் அமலநாத் துரிதப்படுத்தினார். சப் ஜட்ஜ் அவர்களும், டைரெக்டரும் 'மேக்கப் ரூம்'க்குச் சென்றனர். அங்கு ஓர் ரகளை. ராவணன் அவர்களுக்கும் மேக்கப் மேனுக்கும் சண்டை நடந்து கொண்டிருந்தது. இருவரும் நாற்காலியைத் தூக்கிக்கொண்டு யுத்தம் புரியத் தொடங்கினார்கள். குறுக்கே விழுந்து தடுக்கப்போன டைரெக்டருக்கு மண்டையுடைந்துவிட்டது.

'சப் ஜட்ஜ்' அவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. விஷயத்தை விசாரித்த போது விபரீதமாகயிருந்தது.

ராவணனுக்கும் சீதைக்கும் ஏற்கனவே நட்புண்டாம்! அதாவது கஜகர்ணராவுக்கும், பிரேமாவுக்கும் காதல் உண்டாம். நடுவிலே மேக்கப் மேனும் பங்குகொண்டாடியிருக்கிறான். சீதையோ இருவரையுமே விரும்பினாள். இராவணனுக்கு இது கோபத்தைக் கிளப்பிவிட்டுவிட்டது. கொதித்தெழுந்தான் அந்தத் தென்னிலங்கை வேந்தன். ராம—ராவணப் போருக்குப் பதில் ராவண—'மேக்கப் மேன்' போர் தொடங்கிவிட்டது. அதனால் காயம்பட்டு மூர்ச்சையானார் டைரெக்டர்

சுந்தரமையருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை 'சீதையின் மீட்சியா, வீழ்ச்சியா'யிது என்று கேட்டார்.

ராமனாக நடித்த அனந்த சயனம் பி, ஏ. பி. எல். அவர்களுக்குப் பிரேமாவைத் திருமணம் செய்துகொடுக்கலாம் என்பது அவரது எண்ணம். இதை அவர் உள்ளத்தின் அடித்தட்டிலேயே போட்டு வைத்திருந்தார்.

ஆனால் இன்று!......சகிக்கவில்லை அவருக்கு. அனந்தசயனம் அவர்களே இது சீதையின் மீட்சியல்ல வீழ்ச்சிதான், அப்படியே பெயர் கொடுத்து வெளியிடலாம் என்றார். எதற்கும் டைரெக்டர் மரணவாயிலில் நிற்கும் போது என்ன செய்வது?

தலையிலடித்துக்கொண்டார் சப்-ஜட்ஜ். அம்மா பிரேமா என் பேரைக் கெடுத்தாயே, போதும் படப்பிடிப்பும் கலைச் சேவையும் என்றார். கடைசியாக ராமன் ஒரு பக்கம், ராவணன் ஒரு பக்கம், மேக்கப் மேன் ஒருபுறம், டைரெக்டர் 'எமலோகம்' இப்படியாக கம்பி நீட்டினார்.

'சீதையின் மீட்சியோ' அல்லது 'வீழ்ச்சி'யோ வெளிவரவில்லை. அச்சுதராமன் தெருவிலும் பிரேமா 'புரொடக்ஷன' போர்டும், தொங்கவில்லை.

நான்கு தூண்கள்..

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்த மாளிகை மிகவும் அருமையாக இருக்கும் உலகில் என் ஒரு பெண்—அதிலும் ஒரு விதவை என்ன செய்ய முடியும்?

அரசன்:-பெண்ணே! உணர்ந்தேன் உனது வாழ்க்கைக்கு ஒரு வழி வேண்டும். தற்கொலை செய்து கொள்ளாதே! நீ உனது காதலனை அடைந்து வாழ வழி செய்கிறேன். இன்னும் சில தினங்கள் பொறுத்துக்கொள்! இப்பொழுது நேராக வீடு போய்ச்சேர்!

விதவை:—நீங்கள் யார்?

அரசன்:-நான் இந் நாட்டு அரசன்! உன் போன்ற அபலைகளின் வாழ்வுக்கு ஏன மூட்டவே சில திட்டங்களை வகுக்கப் போகிறேன்!

விதவை:—அரசா!

அரசன்:- ஆச்சரியப்படாதே! உன் வரவில் மிகவும் இரகசியமாகவே வைத்துக்கொள். சரி, நீ போ! (செல்கின்றனர்)

காட்சி 6

இடம்:—அரண்மனை
நேரம்:—பகல்
உறுப்பினர்:—அரசன், அமைச்சன்

[அரசன் அமைச்சனின் மறைமுக உரையாடல்]

அரசன்:-அமைச்சரே! நினைத்தாலே நெஞ்சுருகும் நிகழ்ச்சிகள்! இதை நிகழ்ச்சியில் அநுபவிப்பர்களுக்கு அளவு அல்லல் இருந்தே தீரும்!

அமைச்சன்:-அரசே! உலகில் சந்தர்ப்பம் கிடைக்காவிடில் அயோக்கியனும் யோக்கியனாகவே இருப்பான். சிலருக்கு அது கிடைக்கிறது, சிலருக்கு அது கிடைப்பதில்லை மனத்தூயின்றி பாபத் தொழில் புரிபவர் இல்லாமலில்லை, கடவுள் போல் நம் மூடத்தனமான அக்கிரமங்களைச் சம்பாதனை இல்லை. எதற்கும் எல்லை வேண்டும். அதுவும் ஒரு ஒழுங்குடன் படியிருக்கவேண்டும். சட்டம் என்பது ஒரு தனி மனிதனின் திட்டமல்லதான். ஆனால் பல மனிதரின் வழக்க ஒழுங்காக சட்டம் வேண்டியிருக்கிறது. ஏய்ப்பவர் சிலர், ஏமாறுபவர் பலராக இருக்கக் கூடாது; உழைப்பவர் சிலர், உண்டுகளிப்பவர் பலராக இருக்கக்கூடாது. இருவர் நிலையும் ஒரு ஒழுங்குடன் ஒன்று சேர்வதற்கே சட்டம், திட்டமெல்லாம். இதில் ஏய்ப்பவர்களும், வீணர்களும் களிப்பவர்களும்தான் நம் சட்டத்தை எதிர்க்க முன்வருவர் ஏமாளிகளையும் உழைப்பவர்களையும் உன்னத நிலைக்கு உயர்த்த உண்மையான வழிபெற்றுவதுதான் சட்டம்!

அரசன்:- அமைச்சரே! இனிகன் அசைந்தால் மரத்திற்கு ஆபத்து வந்துவிடாது. ஆனால் ஆணிவேரே ஆட்டம் கொடுத்தால்?......மரம் ஒரு அரசாட்சி அதில் உழைப்பாளிகளும் தொழிலாளிகளுமே உண்மையான ஆணிவேர். ஆணிவேருக்கு ஆபத்தேற்பட இனி இந்த அரசன் வழி செய்யமாட்டான்! இதற்கொரு முடிவு செய்யத்தான் வேண்டும் கொடுங்கோலன் என்னை சும்மாவிட்டு வேடிக்கை பார்த்தல் கொப்பளிக்கவே ஆபத்து வந்துவிடும். இனி இவ்வளவு நாட்களாக விட்டு வைத்ததுதான் பெரும் பிழை. வளரும் பயிருக்கு முளைதான் முக்கியம்! அதுபோல் அரசாட்சிக்கு சமூகம்தான் முக்கியம்! இதைச் சீர்படுத்திப் பேணுக வேண்டும்!

அமை:- அரசே! ஒரு விஷயம்!

அர:- என்ன?

அமை:-நம் ஆராய்ச்சியுடன் சில சமூக நலன் நாடும் சொன்னவர்களின் ஆராய்ச்சியும் தேவை. அறிஞர் பலர் உதவிகொண்டு ஒரு ஆராய்ச்சிக்குழு அமைத்து, இனிமேல் ஏற்படுத்தும் சட்டத்தைப் பற்றி சிக்கலில்லாதவாறு சீர்படுத்தியமைக்கவேண்டும்!

அரசன்:-ஆம்! மிகவும் அவசியம். செய்ய வேண்டியதே! அமைச்சரே! ஆரம்பமாகட்டும் ஆராய்ச்சிக்குழு. ஒவ்வொரு அறிஞருக்கும் அழைப்பு அனுப்புங்கள். சட்டத்தின் உதவிகொண்டு சமூகத்திற்குச் சில நல்ல திட்டங்களை வகுப்போம். நீ போ. (அமைச்சன் செல்லுகிறான்)

[திரை]

வைசூரியை :: ஒழியுங்கள்!

நன்னெடுங்காலமாக மனித சமுதாயத்தைக் கொன்றுவரும் பயங்கரமான தொத்து வியாதிகளில், வைசூரியும் ஒன்று.

மனிதன் நாடோடியாக வாழ்ந்த காலத்தில் இந்த நோயை மாரியம்மன் என்னும் ஒரு தேவதையின் செயல் என்று நம்பினான். இந்த நம்பிக்கையினால் வைசூரிக்கு வைத்தியம் செய்யக் கூடாதென்ற கொள்கை உண்டாயிற்று. அந்தக் கொள்கையினால் நோய் நீங்காமல் இறந்த மக்கள் எண்ணற்றவர்.

தமிழ் வைத்தியத்தில் வைசூரிக்கு ஏற்ற மருந்துகள் இருக்கின்றன. ஆனால், அவற்றை உபயோகப்படுத்துவது நிந்தனையால், வைசூரி மருந்துகள் வளர்ச்சியடையவில்லை. என்றாலும் இரண்டொரு மருந்துகள் மிகுந்த பிரயாசையுடன் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றில், ஒன்று எல்லோரும் செய்துகொள்ளக் கூடியதாயும் சிக்கனமானதாயும் அவ்வளவு நோயைத் தீர்க்கக்கூடியதாயும் இருப்பதால் உலக நன்மைக்காக இங்கு வெளியிடுகிறேன்.

மருந்து விவரம்

வேப்பங்கொழுந்து, மஞ்சள், வசம்பு, இம்மூன்றும் வகைக்கு ஒரு சல்லி எடை சிறுத்தெடுத்து சிதைத்து, கால்படி நீரில் போட்டு அடுப்பேற்றி, மாகாணிப்படியாக வற்றவைத்து, வடிகட்டி உட்கொள்ளவேண்டும். ஒவ்வொரு கடவையும் மேற்கண்டபடி புதிய கஷாயம் செய்துகொடுக்க வேண்டும். காலைமாலை 3-நாட்கள் கொடுக்க நோய் நீங்கும் வைசூரி கண்டவுடனே இந்தக் கஷாயம் கொடுத்தால் மிக நலம்.

பத்தியம்:— எந்த எண்ணெயும் மேலில் பூசக்கூடாது அரிப்புண்டானால் பசு நெய் பூசலாம்.

குறிப்பு:—இந்த கஷாயத்தை எல்லா வைசூரிகளுக்கும் கொடுக்கலாம்.

வைத்திய சாஸ்திரன்:
எம். எஸ். இராமசாமி,
அருப்புக்கோட்டை

பயங்கரவாதிகள் பிடிபட்டனர்

யூதஜன பயங்கரவாதிகளான இரு போலீஷ் யூதர்கள் எப்படியோ சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

ஆனால் பாலஸ்தீன எல்லையில் இவர்கள் துப்பாக்கிச் சண்டைக்குப் பிறகு சிறைப் பிடிக்கப்பட்டனர்.

கலை வளர்ந்தாலன்றி நாட்டு நிலை உயராது

கலைஞரைப் போற்ற வேண்டியது அரசியலார் கடன்

ஆட்சியாளருக்கு ஹரீந்திரநாத்சட்டோபத்தியாயா அறிவுரை

11—3—50 முதல் சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் நாடகங்கள் நடத்தி வரும் நகைச்சுவைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களின் கிருஷ்ணன் நாடக சபையினர் நடிக்கும் "துளி விஷம்" என்ற நாடகம் 10—3—50 வெள்ளிக்கிழமை அன்றிரவு, அகில இந்தியக்கவிஞர் ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. "காதல்" பத்திரிகையின் ஆசிரியர் தோழர் அரு. ராமநாதன் அவர்களும், நாடகத்தைப் பார்க்க வந்திருந்தார்கள். சபையின் உரிமையாளர் தோழர் கே. ஆர். ராமசாமி அவர்கள் கவிஞர் அவர்களையும் தோழர் அரு. ராமநாதன் அவர்களையும் மலர்மாலைகள் அணிவித்து வரவேற்றார். அதன்பின், தோழர் ராமநாதன் அவர்கள் நாடகத்தையும், நாடக ஆசிரியரையும், நாடகக்குழுவினர்களையும் பாராட்டிப்பேசினார். பிறகு, கவிஞர் அவர்கள் நாடகத்தைப்பற்றி ஆங்கிலத்தில் பேசியதாவது:—

தோழர்களே! என்னுடைய எண்ணங்களை உங்களுடையமொழியிலே எடுத்துச் சொல்ல முடியாமல் இருப்பதைப்பற்றிமிகவும் வருந்துகிறேன், என்னை மன்னியுங்கள். நாடகத்தைக் கண்ட உங்களுக்கும் எனக்கும் இடையே மொழியில் வேறுபாடு இருக்கிறதே தவிர, உணர்ச்சியில் ஒன்றுபட்டே இருக்கிறோம். என்னை இந்த நாடகத்தைக் காண அழைத்த இந்நாடகக் குழுவினர்க்கு என் நன்றி! என்னை பொறுத்த அளவிலே உங்களைவிட நான் அதிகமாகவே நாடகத்தை ரசித்தேன். காரணம், நான் ஒரு கலைஞன்; அதிலும் குறிப்பாக என்னுடைய இளவயது முதற்கொண்டே நாடகப் பித்துப் பிடித்தவன். நாடக அரங்கின் மூலமாக என்னுடைய எண்ணங்களை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காக பெரும் போராட்டங்களிலே ஈடுபட்டவன். இந்நாடகப் பித்து எனக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்தே என்னிடம் வளர்ந்து வந்திருக்கிறது.

இந்நாடகம் ஒரு உன்னத ஆசிரியரால் தீட்டப்பட்டு, ஒரு உன்னத குழுவினரால் நடத்தப்படுகிறது. நண்பர் இராமசாமி அவர்களை நான் நன்றாக அறிவேன். அவர் நடித்ததைப் பார்த்தீர்கள். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் எவ்வளவு உணர்ச்சியோடு நடித்தார் என்பதை நான் கவனித்து வந்தேன். வடநாட்டில் எப்படி ஒரு பிருதிவிராஜ், தான் சினிமா மூலம் பெறும் செல்வத்தை தன்னுடைய நாடகக் கனவுகள் நனவாக மாற ஆர்வத்துடன் செலவழிக்கிறாரோ அதேபோல தென்னாட்டிலே ஒரு கலைஞனைக் கண்டேன்; அவர்தான் தோழர் இராமசாமி.

சர்க்காரின் கலைப் பொறுப்பு

இவ்வளவு அளவு அரசாங்கம் இவர்களுடைய கலைத் தொண்டைப் பயன்படுத்த முன் வர வேண்டும். அதாவது இம்மாதிரியான ஸ்தாபனங்களை ஏற்படுத்தி இவர்களுடைய திறமை மட்டுமே பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆனால் நம்முடைய அரசாங்கம் இம்மாதிரியான சிரிய முயற்சிகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் தராமல் இருப்பதைக் கண்டு நான் வருந்துகிறேன். வெட்கப்படுகிறேன். உலகிலே முன்னேற்றமடைந்துள்ள நாடுகளின் அரசாங்கங்களெல்லாம் கலைஞர்களுக்கு—கலைக்கும் போதிய ஆதரவு அளிப்பதைத் தங்களுடைய முக்கியப் பொறுப்புகளில் ஒன்றாகக் கருதி வருகின்றன. இவ்வகையில் அவைகள் அடைந்துள்ள நன்மைகள் அநேகம். அதிலும் குறிப்பாக ரஷ்யாவைப் பற்றி உங்களுக்குச் சில சொல்ல விரும்புகிறேன். அதே நேரத்திலே உங்களுக்கு ஒரு எச்சரிக்கை—வேண்டுகோள், ரஷ்யாவைப் பற்றி மக்களிடையே சுயநலன் நோக்கமும், ஆதிக்க வெறியும் கொண்ட ஒரு கும்பல் கட்டுப்பாடாக, வித்தலாட்டமான துவேஷம் நிறைந்த செய்திகளை மக்களிடையே பரப்பி வருகிறார்கள். அதை நீங்கள் நம்பக்கூடாதென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ரஷ்ய தேசத்தின்—சிறப்புகளையும் பெருமைகளையும் நான் நேரிலே அறிந்தவன், அனுபவித்தவன். எனக்கு ஏதாவது ஓரளவு கல்வியும், பயிற்சியும் இருக்குமேயானால், அவைகள் நான் ரஷ்யாவிலே கற்றவைகள்தான். உலகிலேயே மற்றஎந்நாடுகளையும்விட கலைஞர்களுக்கும், கலைக்கும் ஆதரவு தருவதும், முக்கியத்துவம் அளிப்பதும் ரஷ்யாவே தலைசிறந்து விளங்குகிறது. அவர்களிடம் உள்ள பெரும் பெருமையும் சக்தியாய் ஆயுதமும் கலையேயாகும். கடந்த உலகப் போரிலே ரஷ்யா போலந்தைக் கைப்பற்ற நேர்ந்தபோது ரஷ்யாவின் தப்பாக்கி பிடித்த வீரர்களோ, பீரங்கி படையினரோ குண்டுவீச்சு விமானமோட்டிகளோ முதலில் செல்லவில்லை. ஆனால் ரஷ்யநாட்டின் சிறந்த கலைஞர்கள் போலந்துக்குள் பிரவேசித்தார்கள். படம் பிடிப்போரும், பாடகர்களும், நாட்டியமாடுபவர்களும், நாடகக் கலைஞர்களும், சித்திரம் தீட்டுவோரும், சிறுகதை எழுதுவோரும் கவிதை எழுதுவோரும், காவியம் செய்வோரும் ஆகிய இவர்களே போலந்துக்குள் புகுந்தனர். இவைகளே ரஷ்யாவுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்தது. அதற்கு மாறாக நம்முடைய அரசாங்கம் கலைஞர்களை சிரமப்படுத்துவதிலும், அலைய விடுவதிலும் அலாதியான ஆனந்தம் கொண்டிருக்கிறது: இந்த சமயத்திலே ஒன்று குறிப்பிட விரும்புகிறேன், நம்முடைய நாட்டிலிருந்து வேற்று நாடுகளுக்கு, 'கிராமபோன் ரிக்கார்டு'களைப்போன்ற சொன்னதைச்சொல்லும்கிளிப்பிள்ளைகளைத் தூதவர்களாக அனுப்புவதைவிட நம் நாட்டு சிறந்த கலைஞர்களை எட்டுத் திக்கிலும்—உலகெங்கிலும் அனுப்பினால் நம்நாட்டின் அந்தஸ்து உலகிலே உயரும்: உருவாகப் பலனும் விளையும்.

நம்நாட்டு மக்களும் அரசாங்கமும் கலையையும், கலைஞர்களையும், கலைக்கூடங்களையும் வைத்திருக்கும் நிலையைப் பார்க்கும்போது என் உள்ளம் பெரிதும் புண்ணாகிறது. ஆகவே நம் நாட்டு மக்களும் மற்ற நாட்டவர் கலைஞர்களைப் போற்றுவது போல, கலைஞர்களை ஆதரிப்பதைப் போல, போற்றவும், ஆதரவு தரவும் பழக வேண்டும். உடனடியாக இந்த மாற்றம் நிகழ்ந்தால்தான் துன்பத்திலே உழலும் நம் நாட்டிற்கு ஏதாவது பலனேற்படும்.

கவிஞர் ஆங்கிலத்தில் ஆற்றிய சொற்பொழிவை தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துக் கூறினார். முடிவில் உரிமையாளர் தோழர் கே. ஆர். ராமசாமி அவர்கள் கவிஞர் அவர்களுக்கும் தோழர் அரு. ராமநாதன் அவர்களுக்கும் நன்றி கூறினார்.

சிறைச்சாலை!

[என். இ. பாலகுரு]

சிறைச்சாலை எந்தனுக்கோர் புதிய பள்ளி—இங்கு
சிற்றின்பச் சிறு அலைகள் மோதவில்லை
சிறைச்சாலை எந்தனுக்கோர் புதிய தோணி—இங்கு
சாய்த்துவிடும் புயற்காற்று அடிப்பதில்லை
சிறைச்சாலை எந்தனுக்கோர் அறிவுக்கூடம்—இங்கு
சித்தத்தைக் கலைக்குமொரு வீழ்ச்சியில்லை
சிறைச்சாலை எந்தனுக்கோர் புதியகோவில்—இங்கு
சிலையாகாகத் தெய்வங்கள் ஏதும் இல்லை
சிறைச்சாலை எந்தனுக்கோர் அறிவு ஓடை—இங்கு
சாதிமதச் சாக்கடைநீர் கலப்பதில்லை
சிறைச்சாலை எந்தனுக்கோர் புதிய நாடு—இங்கு
சிற்றரசர், பேரரசோ ஏதும் இல்லை
சிறைச்சாலை எந்தனுக்கோர் புதுமை வீடு—இங்கு
செலவுக்குப் பணம் கேட்கும் ஆட்கள் இல்லை
சிறைச்சாலை எந்தனுக்கோர் புதிய காடு—இங்கு
சீறிவந்து கொத்துதற்கோர் நாகம் இல்லை

தொழில் உலகில்...

இந்தோனேஷ்யாவில் தொழிலாளர் போராட்டம்

இந்தோனேஷியாவில் தொழிலாளர் வேலை நிறுத்தப்போராட்டம் வெகு வேகமாகப் பரவுகிறது! சுமாத்ரா பிரிட்டிஷ் அமெரிக்க புகையிலைக் கம்பெனியில் ஜனவரி மாதத்தில் 1500 பேர் வேலை நிறுத்தம் செய்தனர். பாலேம்பாங் ஸ்டாண்டர் வாக்குவம் ஆயில் கம்பெனியில் (Stendered Vaceum Oil Co.,) 2500 தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். அவர்களைப் பின்பற்றி சேமாரங், பேண்டாங், யோக்கிய கர்த்தா முதலிய இடங்களுக்கும் இந்த வேலை நிறுத்தம் உடனே பரவலாயிற்று. கடந்த மாதத்தில் இந்த வேலை நிறுத்தம் மேலும் அதிகரிக்கலாயிற்று. எண்ணெய் இறக்கும் தொழிலாளரும், மாசகர் எண்ணெய்த் தொழிற் சாலையைச் சேர்ந்த தொழிலாளரும் வேலை நிறுத்தம் செய்தனர். யோக்கியகர்த்தாவில் மாத்திரம் 6000 தொழிலாளரும், 3000 நகர சுத்தி தொழிலாளரும் பல் தொழிலாளரும் வேலை நிறுத்தம் செய்தனர். இந்த வேலை நிறுத்தப் புயல் சுமத்ரா, ஜாவா செலபஸ் முதலிய பெரிய பெரிய நகரங்களுக்கும் பரவலாயிற்று.

'கூலியை உயர்த்து,' 'வேலை நேரத்தைக் குறை' என்பவைதான் அந்தத் தொழிலாளரின் கோரிக்கை. அமெரிக்க, பிரிட்டிஷ், டச்சு தொழிற் ஸ்தாபனங்களில் தொழிலாளர் அடிமைகளாக நடத்தப்படுவதை எதிர்த்தும் இந்த தொழிலாளர் கிளர்ச்சி செய்கின்றனர்.

காலனி ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் தொழிலாளர் வேலை நேரம் உலகிலேயே மிக அதிகமானதாகும் இரவும் பகலும் அதிக நேரம் உழைக்கும் கடும் உழைப்புக்கு அவர்கள் பெறும் கூலி மிகமிகக் குறைவானதாகும். இதனால் லட்சக்கணக்கான இந்தோனேஷிய குடும்பங்கள் மிக மோசமான வாழ்க்கை நடத்துகிறார்கள். பலர் பட்டினியால் வாடி உயிர் துறக்கவும் நேருகிறது. குழந்தைச் சாவு இந்தோனேஷியாவில் பயங்கரமான நிலையில் இருக்கிறது. 40 சதவிகித குழந்தைகள் மாள்கின்றன. முதலாளி வர்க்கம் தன்னிடம் வேலை செய்யும் தொழிலாளரின் உடல் நலத்தைப் பற்றிக் கவலைப்படுவதே கிடையாது. ஒரு லட்சம் தொழிலாளர் உள்ள ஒரு குழுவினருக்கு ஒரே ஒரு மருத்துவர் வீதம்தான் இருக்கின்றனர்.

ஜனவரி 28-ம் தேதி இந்தோனேஷிய மந்திரிசபையினர் வெளியிட்டிருக்கும் அறிக்கை பொருளாதார நிலையில் இந்தோனேஷிய மக்களின் கஷ்டங்களை ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆனால் அதே சமயத்தில் அயல்நாட்டு முதலாளித்துவத்துக்கு ஆதரவு தருவதில்மட்டும் அவர்கள் தயங்குவதேயில்லை. அப்படி ஆதரவு தருவது சட்டப்படி சரி என்றும் வாதிடுகின்றனர்.

இந்தோனேஷிய பாட்டாளி மக்களின் துயரங்களுக்கெல்லாம் காலனி ஆட்சியாளரே காரணம் என்லாம். அந்தப்பாட்டாளி மக்கள் சிந்தும் கண்ணீரும் வியர்வையும்தான் டாலர்களாக மாறுகின்றன. இந்தோனேஷிய மக்களின் உழைப்பின் பயனாய் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி முதல்மூன்றுகோடி வரை டச்சு முதலாளிகட்குக் கிடைக்கிறது. என்ற உண்மையை அமெரிக்க அறிக்கை ஒன்று தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது. இது போலவே அமெரிக்க முதலாளிகளும் இந்தோனேஷியரின் உழைப்பைச் சுரண்டி வருகின்றனர். இந்தோனேஷியாவிலுள்ள அமெரிக்க கம்பெனிகளான 'குட்ஈயர்' டயர் கம்பெனி ரப்பர் கம்பெனி 'ஸ்டேண்டர்ட் ஆயில்' கம்பெனி 'ஜெனரல் மோட்டார்' கம்பெனி, 'குட்ரிச்' ரப்பர் கம்பெனி முதலிய இதுபோன்ற பல கம்பெனிகள் கொள்ளை லாபம் அடித்து வருகின்றன.

அமெரிக்க முதலாளி வர்க்கம் இந்தோனேஷியாவை முழு மூச்சுடன் சுரண்டி வருகிறது. இது மட்டுமின்றி, இந்தோனேஷியாவின் வளமனைத்தையும் சுரண்ட அமெரிக்கா ஹாட்டா சர்க்காருடன் ஒரு ஒப்பந்தமே செய்துகொண்டிருப்பதாக புரண்ட் (Front) என்னும் செய்தித்தாள் குறிப்பிடுகிறது. அமெரிக்கா, அண்மையில் இந்தோனேஷியாவுக்கு 10 கோடி டாலர் கடனுதவி கொடுத்திருக்கிறது. தற்போது இந்தோனேஷியாவில் தோன்றியிருக்கும் வேலை நிறுத்தங்கள், அந்நாட்டுத் தொழிலாளர் டாலர் ஏகாதிபத்தியத்துக்கு அடிபணிய மறுக்கின்றனர்என்பதையே விளக்குவதாகும்.

கல்லூரி மாணவிகள் கைது

கல்கத்தா, மார்ச் 17—

கம்யூனிஸ்டுக்கட்சிக்கு சந்தா வசூலித்ததாக இன்று மாலை மூன்று கல்லூரி மாணவிகள் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். இந்தப் பெண்களுடன் வந்த மூன்று வாலிபர்கள் போலீசார் வசம் சிக்காமல் சாமர்த்தியமாகத் தப்பிவிட்டனராம்.

தேவை மணமகள் தேவை விதவைப் பெண் ணிற்கு முதலிடம். முழு விபரத்துடன் எழுதி விபரம் அறியவும். C/o "மாலைமணி"

மதிப்புரை

திருவள்ளுவர் தோற்றதேன்?

[ஆசிரியர்: பூ. கணேசன் கிடைக்குமிடம்: நிலவு நிலையம் சென்னை-6 விலை: அணா 2]

நூலின் தலைப்பைக் கண்டவுடன் "ஆ! திருவள்ளுவர் தோற்றாரா? ஏன் தோற்றார் — எப்படித்தோற்றார் – எதில் தோற்றார்?" என்பன போன்ற வினாக்கள் வாசகர்கள் உள்ளத்தில் எழுவது இயல்பு.

ஆம்; வள்ளுவர் தோற்றுத்தான் போனார்! எப்படித் தோற்றார், எதில் தோற்றார் என்பதை எழிலுற விளக்குகிறார் இந்நூலாசிரியர். நூல் சிறிதே ஆயினும் அரிய கருத்துக்கள் கொண்டது. அவசியம் படித்துணரவேண்டிய நூல். வள்ளுவர் பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோர்க்கு இந்நூல் ஒரு வழிகாட்டியாகப் பயன்படவல்லதாகவுமிருக்கிறது.

* * *

காதலர் பாதையில்...!

[ஆசிரியர்: "மலரோன்," கிடைக்குமிடம்: அச்சகம் நிலையம், 33, கவிணியப்ப நாயக்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2 விலை: அணா 5]

'காதலர் பாதையில்' என்றபெயரைக் கண்ட அளவிலே, "இன்று நாட்டிலே நடமாடும் எத்தனையோ காதல் கதைகளில் இதுவும் ஒன்று போலும்!" என்ற எண்ணம் நமக்குத் தோன்றக்கூடும். ஆனால் உண்மை அஃதன்று. இதுகாறும் வெளிவந்துள்ள காதற்கதைகளுக்கும் ஆசிரியர் 'மலரோன்' தீட்டியுள்ள இக்காதற் கதைக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. பொதுவாக, காதற்கதைகளெனப் படுவன உடலுணர்வு ஒன்றினையே அடிப்படையாகக் கொண்ட காமச்சேட்டைகள் நிரம்பியனவாயிருக்கும், காதலின் உயர் நோக்கம் இன்னதென்பதை அவை உணர்த்தா. ஆனால் 'மலரோனி'ன் காதற்சித்திரம் அங்ஙனமின்றி சங்க இலக்கியங்களில் காணப்படும் காதற் கருத்துக்களை உண்டாக்கி, அன்பும் அறனும் நிறைந்ததாய் பண்பின் மிக்கதோர் பயனுடை நூலாக விளங்குகிறது. படிக்கப்படிக்க இனிக்கிறது! சிறிய நூலாயினும் அரிய கருத்துக்கள் அடங்கியுள்ளது. படித்துப்பாருங்கள்.

* * *

ஞாபகச் சின்னம்

[ஆசிரியர்: தி. ரா. தர்மராசன் வெளியிடுவோர்: கலை நிலையம் A135, நாராயண பிள்ளை வீதி, பெங்களூர் கண்டோன்மெண்ட். விலை: அணா 2.

இவ்விந்தியத் துணைக்கண்டத்தில் நினைவுச் சின்னம் என்று ஏதேனும் ஒன்று அமைக்கப்படவேண்டுமானால், அது காந்தியடிகளின் நினைவுச் சின்னமாகவே இருத்தல் முடியும். அப்படிப்பட்ட நினைவுச் சின்னத்தை அமைக்க வேண்டுவதின் அவசியத்தை காந்தியடிகளின் கதிரேமூர் இருக்கவேண்டும் திட்டங்களை அடிப்படையாக வைத்து இக்கட்டுரையை வரைந்துள்ளார் தோழர் தர்மராஜன். கட்டுரை, படிப்போர் கருத்தைக் கவரத்தக்க முறையில் இனிய எளிய நடையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது. காந்தியடிகளுக்கு நினைவுச் சின்னம் அமைக்கவேண்டுவது அவசியம் என்பதை உணரும் அத்தனை பேர்களிடமும் இச்சிறு வெளியீடு இருக்கவேண்டியது அவசியம் என்றே கருதுகிறேன்.

18—3—50

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St., Mannady, Madras 1